**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC.110/2023**

நாள்.19.01.2026

**அ.சா.1. 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

காளியப்ப கோனார் என்பவர் என் மீது புகார் கொடுத்து அதன் பேரில் திருத்துறைப்பூண்டி, குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மாதாராமன் வகையறா பெயரில் வழக்கு நடைபெற்றது என்று சொன்னால் இல்லை. காளியப்ப கோனார் தவிர வேறு நபர் கொடுத்த புகாரின் பேரில் என் மீது திருத்துறைப்பூண்டி, குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதா என்றால் இல்லை. ராமலிங்கம் என்பவர் எனது வீட்டை இடிக்கக்கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சரியல்ல. காளியப்ப கோனார் தான் வழக்கு தாக்கல் செய்தார். எனது புகாருக்கும், எனது சாட்சியத்திற்கும் முன்னுக்கு பின்பாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காளியப்ப கோனாருக்கும், எனக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் இல்லை. காளியப்ப கோனாருக்கு என் மீது விரோதம் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளின் வீடு உட்பட சுமார் 150 வீடுகள் என்னால் பாதிப்படைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 150 வீட்டு உரிமையாளர்கள் என்மீது கோபமாக இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவில் காலை 09.30 மணியளவில் வீட்டிலிருந்து

புறப்பட்டு மாலை 06.30 மணிவரை எங்கெங்கு சென்று வந்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது திருத்துறைப்பூண்டி காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரணை செய்த போது நான் நல்ல மனநிலையுடன் இருந்து ஆய்வாளர் கேட்டதற்கு நான் பதில் சொன்னேன். நான் சொன்னதை ஆய்வாளர் எழுதிக்கொண்டார். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சியான எனது மனைவியை தவிர வேறு நபர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த நாளில் எனது ஊரான தலைக்காடு, கண்ணன்மேடு பகுதியில் வருவாய் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் நீர்நிலை புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை எடுத்தார்கள் என்றால் சரிதான். நீர்நிலை ஆக்கிரமிப்புகளை வருவாய் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளின் உதவியுடன் தான் செய்தார்கள் என்றால் சரிதான். நீர்நிலை பகுதிகளை அகற்றும்போது வீட்டின் உரிமையாளர்கள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. என்னை அடித்த சம்பவம் பொதுமக்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 20மீ தூரம் இருக்கும். என்னை தாக்கிய போது சம்பவத்தை நேரடியாக எனது மனைவி

மற்றும் சரவணன் ஆகியோர்கள் இருந்தார்கள் என எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரணை செய்து கு.வி.மு.ச 161 பிரிவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்தபோது கண்ணுற்ற சாட்சிகளின் பெயர்களை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த பிறகு எனது மனைவி தான் ஆம்புலன்ஸில் ஏற்றினார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ நாளில் எதிரிகள் பயன்படுத்திய தடயப்பொருள்களான கட்டை மற்றும் கம்பி பாறை ஆகியவற்றின் அகலம் மற்றும் நீளம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ நாளில் எதிரிகள் என்னை தாக்கிய ஆயுதங்கள் வேறு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆயுதங்கள் வேறு. சம்பவ நாளில் எனது மனைவி என் அருகில் இருந்திருந்தால் சண்டையை தடுத்திருப்பார் என்றும், சண்டையின் போது எனது மனைவிக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடந்த நாளில் எனது மனைவி, சரவணன் ஆகியோர்கள் என்னுடன் இருந்திருந்தால் அவர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் சம்பவ நாளில் எனது இருசக்கர மோட்டார் சைக்கிளை எதிரிகள் ஜனார்த்தன், தமிழ்மைந்தன் ஆகியோர்கள் எனது மோட்டார் சைக்கிளை உடைத்தார்கள் என்று சொல்லிவிட்டு எனது முதன்மை

சாட்சியத்தில் எதிரி வேணுகோபால் தான் எனது வாகனத்தை உடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரின் படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், என்னை யார் தாக்கினார்கள் என மாறி மாறி சொல்லியுள்ளேன் என்றும், நான் சொல்வது போல் சம்பவ நாளில் எதிரிகள் என்னை அடித்திருந்தால் அவர்களை குறிப்பாக எனது முதன்மை சாட்சியத்தில் சொல்லியிருப்பேன் என்றும், புகாரில் உள்ளபடி சம்பவம் ஏதும் நடைபெறாததால் தான் தடயப்பொருள்களை மாறி மாறி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நாளில் நான் எனது இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றபோது நிலைதடுமாறி கீழே விழுந்ததால் எனது வாகனத்திற்கும், எனக்கும் காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையின் போது வேறு மாதிரியும், நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகளுக்கு, சம்பவ இடம் அருகில் வீடுகள் உள்ளதா என்றால் வீடுகள் இல்லை. சம்பவத்தை நேரடியாக பார்த்தார்கள். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான செந்தில், புனிதா ஆகியோர்களுக்கு சம்பவ நடந்த இடத்தில் வீடுகள் உள்ளதா என்றால் இல்லை. அவர்களது உறவினர் வீட்டை இடித்தபோது வந்தார்கள். அப்போது சம்பவத்தை பார்த்தார்கள். நீர்நிலை புறம்போக்கு பகுதிகளில் உள்ள வீடுகளை இடித்த பகுதி

வேறு இடம் என்றும், சம்பவம் நடந்த இடம் வேறு இடம் என்றும் சாட்சிகள் செந்தில், புனிதா ஆகியோர்கள் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக மேற்படி சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்த்தார்கள் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சம்பவ நாளில் எதிரிகள் என்னை நிர்வாணப்படுத்தினார்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் நான் சொன்னேன் அதை போலீசார் எழுதிக்கொள்ளவில்லை. நான் எனது பகுதியில் உள்ள நீர்நிலை ஆக்கிரமிப்பில் உள்ள வீடுகளை இடிக்க கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எதிரிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஊர் முழுக்க எதிரிகள் என்றும், எனக்கு தற்செயலாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி ஒட்டுமொத்த மக்களிடமிருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக எதிரிகளின் மீது புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது புகார் வாக்குமூலத்திற்கும், போலீஸ் விசாரணையின் போதும், நீதிமன்ற முதல் விசாரணையிலும் முன்னுக்கு பின்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த குற்ற வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து

இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் என்னை எந்த விதமான ஆபாச வார்த்தைகளையும், கொலை மிரட்டலையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:– இல்லை.</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.